# Monthly Quiz file – October 2025

1. Choose the correct statement regarding International Civil Aviation Organization.

A) It is a United Nations specialized agency, established in 1944 by Chicago Convention.

B) ICAO Council is divided into three parts and it is elected by the Member States during the ICAO Assembly.

C) India has been a continuous member of the part II of ICAO Council.

D) All statements are correct.

சர்வதேச பொது விமானப் போக்குவரத்து அமைப்பு தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு முகமையான இது 1944ஆம் ஆண்டில் சிகாகோ உடன்படிக்கை மூலம் நிறுவப்பட்டது.

B) மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள ICAO சபையானது, ICAO மன்றக் கூடுகையின் போது அதன் உறுப்பினர் நாடுகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

C) ICAO சபையின் இரண்டாம் பகுதியில் இந்தியா தொடர்ச்சியான உறுப்பினராக இருந்து வருகிறது.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

2. India's first private-sector helicopter Final Assembly Line is going to set up by

A) Tata Advanced Systems Limited

B) Reliance Defence Limited

C) Mahindra Aerospace

D) General Aeronautics

இந்தியாவின் முதல் தனியார் துறை ஹெலிகாப்டர் இறுதி ஒருங்குசேர்ப்பு வசதியினை அமைக்க உள்ள நிறுவனம் எது?

A) டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட்

B) ரிலையன்ஸ் டிஃபென்ஸ் லிமிடெட்

C) மஹிந்திரா ஏரோஸ்பேஸ்

D) ஜெனரல் ஏரோநாட்டிக்ஸ்

3. Choose the incorrect statement regarding NCRB (National Crime Records Bureau) report on suicides 2023.

A) Rajasthan reported the highest number of suicides due to illness.

B) Illness was the second leading cause of suicide in India in 2023.

C) Suicides due to mental illness were highest under the illness category

D) All statements are correct

தற்கொலைகள் குறித்த 2023 ஆம் ஆண்டிற்கான தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் அறிக்கை தொடர்பான தவறான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இராஜஸ்தான் மாநிலத்தில் நோய் காரணமாக அதிக எண்ணிக்கையிலான தற்கொலைகள் பதிவாகியுள்ளன.

B) 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் தற்கொலைக்கான இரண்டாவது முக்கிய காரணமாக நோய் வாய்ப்பட்ட நிலை இருந்தது.

C) மனநோய் காரணமான தற்கொலைகளானது நோய்கள் காரணமான தற்கொலைகள் பிரிவின் கீழ் அதிகமாக எண்ணிக்கையில் இருந்தது.

D) அனைத்துக் கூற்றுக்களும் சரியானவை.

4. India's first child marriage-free district is located in

A) Odisha

B) Chhattisgarh

C) Andhra Pradesh

D) West Bengal

இந்தியாவின் முதல் குழந்தை திருமண முறையில்லா மாவட்டம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

A) ஒடிசா

B) சத்தீஸ்கர்

C) ஆந்திரப் பிரதேசம்

D) மேற்கு வங்காளம்

5. Who entered in the Hurun India Rich List 2025 for the first time?

A) Shah Rukh Khan

B) Aravind Srinivas

C) Roshni Nadar

D) Kumar Birla

ஹுருன் இந்தியா அமைப்பின் 2025 ஆம் ஆண்டிற்கான செல்வந்தர்கள் பட்டியலில் முதல் முறையாக இடம் பெற்றுள்ள நபர் யார்?

A) ஷாருக்கான்

B) அரவிந்த் ஸ்ரீனிவாஸ்

C) ரோஷ்னி நாடார்

D) குமார் பிர்லா

6. Which of the following two organisations have launched the “Promise to Children” campaign?

A) BCCI and UNICEF

B) FAO and ICC

C) UNICEF and FAO

D) ICC and UNICEF

பின்வரும் எந்த இரண்டு அமைப்புகள் ஆனது "Promise to Children" எனும் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளன?

A) BCCI மற்றும் UNICEF

B) FAO மற்றும் ICC

C) UNICEF மற்றும் FAO

D) ICC மற்றும் UNICEF

7. Who has been re-appointed as Attorney General of India?

A) K.K. Venugopal

B) R. Venkataramani

C) Mukul Rohatgi

D) Goolam Essaji Vahanvati

இந்தியாவின் அரசுத் தலைமை வழக்கறிஞராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) K.K. வேணுகோபால்

B) R. வெங்கடரமணி

C) முகுல் ரோஹத்கி

D) கூலம் எஸ்ஸாஜி வாகன்வதி

8. Choose the correct statement regarding India's Dairy Sector.

A) India remains the world’s top milk producer.

B) Uttar Pradesh is the top milk producer in the country.

C) Dairy forms 5 percent of India’s GDP.

D) All statements are correct.

இந்தியாவின் பால்வளத் துறை தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இந்தியா உலகின் முன்னணி பால் உற்பத்தியாளராக உள்ளது.

B) இந்தியாவில் பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாநிலம் உத்தரப் பிரதேசம் ஆகும்.

C) பால்வளத் துறையானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

9. Infectious bovine rhinotracheitis (IBR) is caused by

A) Bovine papillomavirus

B) Bovine viral diarrhoea virus

C) Bovine herpesvirus type 1

D) Parainfluenza-3 virus

தொற்றுமிக்க மாட்டின ரைனோட்ராக்கிடிஸ் (IBR) தொற்று எதனால் ஏற்படுகிறது?

A) மாட்டின பாப்பிலோமா வைரஸ்

B) மாட்டின வயிற்றுப்போக்கு வைரஸ்

C) மாட்டின ஹெர்பெஸ்வைரஸ் வகை 1

D) பாரைன்ஃப்ளுயன்சா-3 வைரஸ்

10. The Conservation status of Red Sanders in IUCN red list is

A) Endangered

B) Critically Endangered

C) Vulnerable

D) Near Extinct

IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் செம்மரங்களின் வளங்காப்பு நிலை யாது?

A) அருகி வரும் இனம்

B) மிகவும் அருகி வரும் இனம்

C) எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்

D) அழியும் தருவாயில் உள்ள இனம்

11. Highest rate of crimes against children was registered at

A) Maharashtra

B) Assam

C) Delhi

D) Uttar Pradesh

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிக விகிதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மாநிலம் எது?

A) மகாராஷ்டிரா

B) அசாம்

C) டெல்லி

D) உத்தரப் பிரதேசம்

12. India's first Integrative Oncology Research and Care Centre were inaugurated at

A) All-India Institute of Ayurveda, Goa

B) All India Institute of Medical Sciences, New Delhi

C) Adyar Cancer Institute, Chennai

D) Regional Cancer Centre, Thiruvananthapuram

இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்தப் புற்றுநோயியல் ஆராய்ச்சி மற்றும் நல சேவை மையம் எங்கே திறக்கப்பட்டுள்ளது?

A) அகில இந்திய ஆயுர்வேத நிறுவனம், கோவா

B) அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம், புது டெல்லி

C) அடையாறு புற்றுநோய் மையம், சென்னை

D) பிராந்தியப் புற்றுநோய் மையம், திருவனந்தபுரம்

13. Which country is hosting the 12th World Para Athletics Championships 2025?

A) Japan

B) UAE

C) France

D) India

உலக மாற்றுத் திறனாளிகளுக்கான 12வது தடகள சாம்பியன்ஷிப் போட்டியை (2025) நடத்துகின்ற நாடு எது?

A) ஜப்பான்

B) ஐக்கிய அரபு அமீரகம்

C) பிரான்ஸ்

D) இந்தியா

14. 69th International Atomic Energy Agency (IAEA) General Conference was held at

A) Switzerland

B) United States

C) Austria

D) Germany

69வது சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) பொது மாநாடானது எந்த நாட்டில் நடைபெற்றது?

A) சுவிட்சர்லாந்து

B) அமெரிக்கா

C) ஆஸ்திரியா

D) ஜெர்மனி

15. Gokul Jalashay and Udaipur Jheel wetlands are located at

A) Rajasthan

B) Bihar

C) Uttar Pradesh

D) Madhya Pradesh

கோகுல் ஜலஷே மற்றும் உதய்பூர் ஜீல் ஆகிய ஈரநிலங்கள் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளன?

A) இராஜஸ்தான்

B) பீகார்

C) உத்தரப் பிரதேசம்

D) மத்தியப் பிரதேசம்

16. Choose the correct statement regarding India's Cold Desert Reserve.

A) Spiti Valley Becomes India's First Cold Desert Biosphere Reserve.

B) It is India's 13th biosphere reserve listed by UNESCO.

C) It was the first high-altitude cold desert biosphere reserve.

D) All statements are correct.

இந்தியாவின் குளிர் பாலைவன உயிர்க்கோளக் காப்பகம் தொடர்பான சரியான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) ஸ்பிட்டி பள்ளத்தாக்கு இந்தியாவின் முதல் குளிர் பாலைவன உயிர்க்கோளக் காப்பகமாக மாறியுள்ளது.

B) இது யுனெஸ்கோ அமைப்பினால் பட்டியலிடப்பட்ட இந்தியாவின் 13வது உயிர்க் கோளக் காப்பகம் ஆகும்.

C) இது உயரமான பகுதியில் அமைந்த முதல் குளிரான பாலைவன உயிர்க்கோளக் காப்பகம் ஆகும்.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

17. Which of following three countries are hosting the 2026 FIFA football World Cup?

A) United States, Brazil, and Argentina

B) Canada, Mexico, and United States

C) Germany, France, and Italy

D) Qatar, Saudi Arabia, and UAE

பின்வரும் எந்த மூன்று நாடுகளானது 2026 ஆம் ஆண்டு FIFA கால்பந்து உலகக் கோப்பைப் போட்டியை நடத்துகின்றன?

A) அமெரிக்கா, பிரேசில் மற்றும் அர்ஜென்டினா

B) கனடா, மெக்சிகோ மற்றும் அமெரிக்கா

C) ஜெர்மனி, பிரான்சு மற்றும் இத்தாலி

D) கத்தார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம்

18. Who has been appointed as the 13th director of the Botanical Survey of India?

A) Dr. Kanad Das

B) Dr. Ashiho A. Mao

C) Dr. Sudhansu Sekhar Dash

D) Dr C. Murugan

இந்தியத் தாவரவியல் ஆய்வு அமைப்பின் 13வது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) டாக்டர் கனத் தாஸ்

B) டாக்டர் அஷிஹோ A. மாவோ

C) டாக்டர் சுதான்சு சேகர் தாஷ்

D) டாக்டர் C. முருகன்

19. Choose the incorrect statement regarding the AFSPA Act.

A) AFSPA Act was passed in 1985.

B) The law grants armed forces powers to use force, arrest without warrant.

C) AFSPA has been in force in Manipur since 1981.

D) All the statements are correct.

AFSPA சட்டம் தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) ஆயுதப் படைகளின் சிறப்பு அதிகாரங்கள் சட்டமானது 1985 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்டது.

B) இந்தச் சட்டமானது ஆயுதப்படைகளுக்கு அதன் அதிகாரத்தினைப் பயன்படுத்துவதற்கும், பிடியாணை இல்லாமல் கைது செய்வதற்கும் அதிகாரங்களை வழங்குகிறது.

C) மணிப்பூரில் 1981 ஆம் ஆண்டு முதல் AFSPA சட்டம் அமலில் உள்ளது.

D) அனைத்துக் கூற்றுக்களும் சரியானவை.

20. 12th Sustainable Mountain Development Summit was held at

A) Leh

B) Shimla

C) Gangtok

D) Dehradun

12வது நிலையான மலை மேம்பாட்டு உச்சி மாநாடு ஆனது எங்கு நடத்தப் பட்டது?

A) லே

B) சிம்லா

C) காங்டாக்

D) டேராடூன்

21. Which institute has been nominated as a UN Centre of Excellence for artificial intelligence, capacity building, and skilling?

A) IIT - Delhi

B) IISc - Bangalore

C) IIT - Madras

D) IIT - Gandhinagar

செயற்கை நுண்ணறிவு, திறன் கட்டமைப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான ஐ.நா. சபையின் சிறப்பு மையமாக பரிந்துரைக்கப் பட்டுள்ள நிறுவனம் எது?

A) IIT - டெல்லி

B) IISc - பெங்களூரு

C) IIT - மதராஸ்

D) IIT - காந்திநகர்

22. Which of the following winners, of 2025 Young Champions of the Earth award, is from India?

A) Joseph Nguthiru

B) Noemi Florea

C) Jinali Mody

D) Vidyut Mohan

2025 ஆம் ஆண்டிற்கான இளம் புவி வாகையர் விருதை வென்றவர்களுள் இந்தியாவைச் சேர்ந்தவர் யார்?

A) ஜோசப் நுகுத்திரு

B) நோமி ஃப்ளோரியா

C) ஜினாலி மோடி

D) வித்யுத் மோகன்

23. Choose the incorrect statement regarding UPI.

A) The UPI system was launched in 2016 by the NPCI.

B) Nepal has recently joined in India's UPI network.

C) Currently 10 countries, including India are using UPI.

D) All the statements are correct.

UPI தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) UPI அமைப்பு ஆனது 2016 ஆம் ஆண்டில் இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகத்தினால் (NPCI) தொடங்கப்பட்டது.

B) நேபாள நாடானது சமீபத்தில் இந்தியாவின் UPI வலையமைப்பில் இணைந்து உள்ளது.

C) தற்போது இந்தியா உட்பட 10 நாடுகள் UPI அமைப்பினைப் பயன்படுத்துகின்றன.

D) அனைத்துக் கூற்றுக்களும் சரியானவை.

24. Choose the incorrect pair of missiles and types.

A) Anant shastra – QRSAM

B) AGNI Prime – IRBM

C) PRALAY missile – VSHORADS

D) Agni V – ICBM

எறிகணைகள் மற்றும் அதன் வகைகள் தொடர்பான தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

A) அனந்த் சாஸ்திரா – QRSAM

B) அக்னி பிரைம் – IRBM

C) PRALAY எறிகணை – VSHORADS

D) அக்னி V – ICBM

25. Choose the incorrect statement regarding the "Environmental Accounting on Forest – 2025" report

A) India's forest cover reached 21.76% of the total geographical area as of 2021-22.

B) Among the states, Karnataka recorded the highest increase in forest cover.

C) The value of provisioning services from forests was approximately 0.16% of India's GDP at current prices in 2021–22.

D) Madhya Pradesh is the top contributing state in terms of the value of carbon retention regulating services.

"வனம் தொடர்பான சுற்றுச்சூழல் கணக்கெடுப்பு - 2025" அறிக்கை தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) 2021–22 ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவின் வனப்பகுதியானது அதன் மொத்தப் புவியியல் பரப்பளவில் 21.76 சதவீதத்தினை எட்டியது.

B) மாநிலங்களில், கர்நாடகா மாநிலத்தில் வனப்பகுதியின் அதிகபட்ச அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

C) 2021–22 ஆம் ஆண்டில் நடப்பு விலையில், காடுகளிலிருந்து பெறப்படும் சேவைகளின் மதிப்பானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 0.16% ஆக இருந்தது.

D) கார்பன் தக்கவைப்பு சீர்முறைச் சேவைகளின் மதிப்பின் அடிப்படையில் மத்தியப் பிரதேசம் முன்னணியில் உள்ளது.

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ***D*** | 2. | ***A*** | 3. | ***A*** | 4. | ***B*** | 5. | ***A*** | 6. | ***D*** | 7. | ***B*** | 8. | ***D*** | 9. | ***C*** | 10. | ***A*** |
| 11. | ***B*** | 12. | ***A*** | 13. | ***D*** | 14. | ***C*** | 15. | ***B*** | 16. | ***D*** | 17. | ***B*** | 18. | ***A*** | 19. | ***A*** | 20. | ***D*** |
| 21. | ***C*** | 22. | ***C*** | 23. | ***B*** | 24. | ***C*** | 25. | ***B*** | | | | | | | | | | |

26. Choose the incorrect statement regarding UPSC.

A) It was first set up on 1 October 1926 under the Government of India Act 1919.

B) It became the Federal Public Service Commission in 1937.

C) It was renamed the Union Public Service Commission on 26 January 1948.

D) All statements are correct

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொடர்பான தவறானக் கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இது முதன்முதலில் 1926 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் கீழ் அமைக்கப் பட்டது.

B) இது 1937 ஆம் ஆண்டில் கூட்டு அரசுப் பணியாளர் தேர்வாணையமாக மாறியது.

C) இது 1948 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் என மறுபெயரிடப்பட்டது.

D) அனைத்து கூற்றுகளும் சரியானவை

27. Whose birth anniversary is celebrated as Swachh Bharat Diwas?

A) Sardar Vallabhbhai Patel

B) B.R. Ambedkar

C) M.K. Gandhi

D) Kasthuriba Gandhi

யாருடைய பிறந்தநாள் ஆனது ஸ்வச் பாரத் திவாஸ் என்று கொண்டாடப் படுகிறது?

A) சர்தார் வல்லபாய் படேல்

B) B.R. அம்பேத்கர்

C) M.K. காந்தி

D) கஸ்தூரிபா காந்தி

28. Highest number of rape and economic offence cases were recorded in 2023 at?

A) Telangana

B) Uttar Pradesh

C) Bihar

D) Rajasthan

2023 ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான பாலியல் வன்கொடுமை மற்றும் பொருளாதாரக் குற்ற வழக்குகள் எந்த மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது?

A) தெலுங்கானா

B) உத்தரப் பிரதேசம்

C) பீகார்

D) இராஜஸ்தான்

29. 11th World Green Economy Summit (WGES) was held at

A) Abu Dhabi

B) Riyadh

C) Dubai

D) Doha

11வது உலக பசுமைப் பொருளாதார உச்சி மாநாடு (WGES) எங்கு நடத்தப் பட்டது?

A) அபுதாபி

B) ரியாத்

C) துபாய்

D) தோஹா

30. Choose the correct statement regarding India and Russia's partnership.

A) On 3 October 2000, India and Russia signed the Declaration on Strategic Partnership

B) Treaty of peace, friendship and cooperation between them was signed in1971

C) Diplomatic relations between India and erstwhile USSR were Established in 1947

D) All statements are correct

இந்தியா மற்றும் ரஷ்யாவின் கூட்டாண்மை தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) 2000 ஆம் ஆண்டு அக்டோபர் 03 ஆம் தேதியன்று, இந்தியாவும் ரஷ்யாவும் உத்தி சார் கூட்டாண்மை குறித்த பிரகடனத்தில் கையெழுத்திட்டன.

B) அவற்றிற்கு இடையேயான அமைதி, நட்பு மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஆனது 1971 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.

C) இந்தியாவிற்கும் முன்னாள் சோவியத் ஒன்றியத்திற்கும் இடையிலான அரசுமுறை உறவுகள் 1947 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டன.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை

31. Lecanemab is a newly discovered drug for

A) Type 2 Diabetes

B) Alzheimer's disease

C) Multiple Sclerosis

D) Rheumatoid Arthritis

லெக்கனேமாப் என்பது எந்த நோய்க்காக புதிதாகக் கண்டறியப்பட்ட மருந்தாகும்?

A) இரண்டாம் வகை நீரிழிவு நோய்

B) அல்சைமர் நோய்

C) தண்டுவட மரப்பு நோய்

D) முடக்கு வாதம்

32. False smut disease in paddy is caused by

A) Fungus

B) Bacteria

C) Virus

D) Parasites

நெற் பயிர்களில் ஏற்படும் நெற்பழப் பாதிப்பு நோய் எதனால் ஏற்படுகிறது?

A) பூஞ்சை

B) பாக்டீரியா

C) வைரஸ்

D) ஒட்டுண்ணிகள்

33. Choose the incorrect statement regarding national song – 'Vande Mataram'.

A) Constituent Assembly had accorded a national song status in January 26, 1950.

B) It was Composed in Sanskrit by Bankimchandra Chatterji in 1875

C) First published in Chatterji's Bengali novel Anandamath in 1882.

D) All statements are correct

தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' தொடர்பான தவறானக் கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

A) அரசியலமைப்புச் சபையானது, 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று அதற்கு தேசியப் பாடல் அந்தஸ்தை வழங்கியது.

B) இது 1875 ஆம் ஆண்டில் பங்கிம் சந்திர சட்டர்ஜி அவர்களால் சமஸ்கிருத மொழியில் இயற்றப்பட்டது.

C) 1882 ஆம் ஆண்டில் ஆனந்த மடம் எனும் சட்டர்ஜியின் வங்காள மொழி புதினத்தில் இது முதன்முதலில் வெளியிடப்பட்டது.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

34. The traditional handwoven Bhavani jamakkalam belongs to

A) Kerala

B) Tamil Nadu

C) Karnataka

D) Andhra Pradesh

கைத்தறி மூலம் தயாரிக்கப்படும் பாரம்பரிய பவானி ஜமக்காளம் எந்த மாநிலத்தினைச் சேர்ந்தது?

A) கேரளா

B) தமிழ்நாடு

C) கர்நாடகா

D) ஆந்திரப் பிரதேசம்

35. Which of the following island is renamed as Zubeen Garg Island?

A) Phuket Island

B) Sungei Buloh Wetland Reserve

C) St. John’s Island

D) Majuli Island

பின்வரும் எந்தத் தீவு ஆனது ஜுபீன் கார்க் தீவு என மறுபெயரிடப் பட்டது?

A) ஃபூகெட் தீவு

B) சுங்கேய் பூலோ சதுப்பு நில காப்பகம்

C) செயிண்ட் ஜான்ஸ் தீவு

D) மஜுலி தீவு

36. Which Rabi crop received the "highest" increase in its Minimum Support Price (MSP)?

A) Wheat

B) Rapeseed and Mustard

C) Lentil

D) Safflower

எந்த ராபி பருவப் பயிருக்கு அதன் குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) "அதிக" அதிகரிப்பு அறிவிக்கப்பட்டது?

A) கோதுமை

B) ராப்சீட் மற்றும் கடுகு

C) பருப்பு

D) குங்குமப்பூ

37. The bilateral maritime Exercise KONKAN-2025 was held between

A) India and the US

B) India and Japan

C) India and the UK

D) India and France

KONKAN-2025 எனப்படும் இருதரப்பு கடல்சார் பயிற்சியானது எந்தெந்த நாடுகளுக்கிடையே நடைபெற்றது?

A) இந்தியா மற்றும் அமெரிக்கா

B) இந்தியா மற்றும் ஜப்பான்

C) இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு

D) இந்தியா மற்றும் பிரான்சு

38. World's highest motorable road was built at

A) Umling La Pass

B) Khardung La Pass

C) Chang La Pass

D) Mig La Pass

வாகனங்கள் இயங்குவதற்கு உகந்த உலகின் மிக உயரமான சாலையானது எங்கு கட்டமைக்கப் பட்டுள்ளது?

A) உம்லிங் லா கணவாய்

B) கார்டுங் லா கணவாய்

C) சாங் லா கணவாய்

D) மிக் லா கணவாய்

39. The first Mahout Village in Tamil Nadu was recently inaugurated at which elephant camp?

A) Kozhikamuthi Elephant Camp, Anamalai TR

B) Vandalur Zoological Park

C) Theppakadu, Mudumalai TR

D) Chadivayal, Coimbatore Forest Division

தமிழ்நாட்டின் முதல் யானைப் பாகன் கிராமம் ஆனது சமீபத்தில் எந்த யானை முகாமில் திறக்கப் பட்டது?

A) கோழிகமுத்தி யானைகள் முகாம், ஆனைமலை புலிகள் வளங்காப்பகம்

B) வண்டலூர் விலங்கியல் பூங்கா

C) தெப்பக்காடு, முதுமலை புலிகள் வளங்காப்பகம்

D) சாடிவயல், கோயம்புத்தூர் வனப் பிரிவு

40. ICGS Akshar is a

A) Offshore Patrol Vessel (OPV)

B) Pollution Control Vessel (PCV)

C) Anti-Submarine Warfare Shallow Water Craft (ASW-SWC)

D) Fast Patrol Vessel

ICGS அக்சர் என்பது யாது?

A) கடல்சார் ரோந்துக் கப்பல் (OPV)

B) மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பல் (PCV)

C) ஆழமற்ற பகுதியில் இயங்கும் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பல் (ASW-SWC)

D) விரைவு ரக ரோந்துக் கப்பல்

41. 2025 Nobel Prize in Physiology or Medicine was awarded for

A) mRNA Vaccines

B) Innate Immunity

C) Peripheral Immune Tolerance

D) The structure of DNA

மருத்துவத்திற்கான 2025 ஆம் ஆண்டின் நோபல் பரிசு எதற்காக வழங்கப் பட்டது?

A) mRNA தடுப்பூசிகள்

B) உள்ளார்ந்த நோய் எதிர்ப்பு ஆற்றல்

C) புற நோயெதிர்ப்பு சகிப்புத் தன்மை

D) டிஎன்ஏ அமைப்பு

42. The 'Pink Patrol' was recently launched for the first time in

A) The Nilgiris

B) Chennai

C) Coimbatore

D) Madurai

'Pink Patrol' வாகனம் முதன்முறையாக சமீபத்தில் எங்கு அறிமுகப்படுத்தப்பட்டது?

A) நீலகிரி

B) சென்னை

C) கோயம்புத்தூர்

D) மதுரை

43. NATPOLREX-X 2025 is a

A) Counter-Terrorism Exercise

B) Pollution Response Exercise

C) Military Exercise

D) Air defence Exercise

NATPOLREX-X 2025 என்பது?

A) தீவிரவாத எதிர்ப்பு பயிற்சி

B) மாசு தணிப்பு நடவடிக்கைப் பயிற்சி

C) இராணுவப் பயிற்சி

D) வான்வழிப் பாதுகாப்புப் பயிற்சி

44. Conservation status of Painted storks in the IUCN Red List?

A) Least concern

B) Endangered

C) Critically Endangered

D) Near threatened

IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் மஞ்சள் மூக்கு நாரைகளின் வளங்காப்பு நிலை யாது?

A) தீ வாய்ப்பு கவலை குறைந்த இனம்

B) அருகி வரும் இனம்

C) மிக அருகி வரும் இனம்

D) அச்சுறு நிலையை அண்மித்த இனம்

45. PM-SETU stands for

A) Promotion of Modern Skill Enhancement and Technical Upliftment

B) Prime Minister's Scheme for Empowering Through Skilling and Employment

C) Prime Minister's Social and Educational Training Unit

D) Programme for Mass Entrepreneurship and Training Upgradation

PM-SETU என்பது எதைக் குறிக்கிறது?

A) நவீன திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டை ஊக்குவித்தல்

B) திறன் மற்றும் வேலைவாய்ப்பு மூலம் அதிகாரமளிப்பதற்கான பிரதமரின் திட்டம்

C) பிரதமரின் சமூக மற்றும் கல்வி பயிற்சி பிரிவு

D) பெருமளவிலான தொழில்முனைவு மற்றும் பயிற்சி மேம்பாட்டிற்கான திட்டம்

46. Which Article is providing a constitutional basis for Alternative Dispute Resolution (ADR)?

A) Article 39A

B) Article 32

C) Article 14

D) Article 48A

மாற்று வழி தகராறுகள் தீர்வுக்கு (ADR) அரசியலமைப்பு அடிப்படையை வழங்கும் சரத்து எது?

A) சரத்து 39A

B) சரத்து 32

C) சரத்து 14

D) சரத்து 48A

47. What is this preservation process used in first Coral Larvae Cryobank facility?

A) Cryostasis

B) Cryofixation

C) Vitrification

D) Lyophilization

பவளப்பாறை லார்வாக்களுக்கான முதல் கிரையோ வங்கி வசதியில் பயன்படுத்தப் படும் பதப்படுத்தல் செயல்முறை யாது?

A) கிரையோஸ்டாஸிஸ்

B) கிரையோஃபிக்சேஷன்

C) விட்ரிஃபிகேஷன்

D) லியோபிலைசேஷன்

48. Choose the incorrect statement regarding the Model Code of Conduct.

A) It was first introduced in India in 1960.

B) Kerala was the first state to adopt a code of conduct for elections.

C) It was governed under the Representation of the People Act, 1951.

D) All statements are correct.

தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பான தவறானக் கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) இது முதன்முதலில் 1960 ஆம் ஆண்டில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

B) தேர்தல்களுக்கான நடத்தை விதிகளை ஏற்றுக் கொண்ட முதல் மாநிலம் கேரளா ஆகும்.

C) இது 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப் படுகிறது.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

49. State of Social Justice 2025 report was released by

A) ILO

B) UNDP

C) ECOSOC

D) UNICEF

2025 ஆம் ஆண்டு சமூக நீதியின் நிலை குறித்த அறிக்கையானது எந்த அமைப்பினால் வெளியிடப்பட்டது?

A) ILO

B) UNDP

C) ECOSOC

D) UNICEF

50. Which Elephant Reserve hosts the highest population of elephants in Tamil Nadu?

A) Anamalai ER

B) Srivilliputhur ER

C) Nilgiris ER

D) Agasthyamalai ER

தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் யானைகளைக் கொண்டுள்ள காப்பகம் எது?

A) ஆனைமலை யானைகள் வளங்காப்பகம்

B) ஸ்ரீவில்லிபுத்தூர் யானைகள் வளங்காப்பகம்

C) நீலகிரி யானைகள் வளங்காப்பகம்

D) அகஸ்தியமலை யானைகள் வளங்காப்பகம்

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26. | ***C*** | 27. | ***C*** | 28. | ***D*** | 29. | ***C*** | 30. | ***D*** | 31. | ***B*** | 32. | ***A*** | 33. | ***A*** | 34. | ***B*** | 35. | ***C*** |
| 36. | ***D*** | 37. | ***C*** | 38. | ***D*** | 39. | ***C*** | 40. | ***D*** | 41. | ***C*** | 42. | ***A*** | 43. | ***B*** | 44. | ***D*** | 45. | ***B*** |
| 46. | ***A*** | 47. | ***C*** | 48. | ***C*** | 49. | ***A*** | 50. | ***C*** | | | | | | | | | | |

51. The IUCN conservation status of the Indian wolf is

A) Critically Endangered

B) Near Threatened

C) Vulnerable

D) Endangered

IUCN பட்டியலில் இந்திய ஓநாய்களின் வளங்காப்பு நிலை யாது?

A) மிக அருகி வரும் இனம்

B) அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனம்

C) எளிதில் பாதிக்கப்படக் கூடிய இனம்

D) அருகி வரும் இனம்

52. India's first QR code-based kiosk for digital payment of traffic challans was launched in

A) New Delhi

B) Mumbai

C) Bengaluru

D) Gurugram

போக்குவரத்து அபராதங்களை டிஜிட்டல் முறையில் செலுத்துவதற்கான இந்தியாவின் முதல் QR குறியீடு அடிப்படையிலான முனையம் எங்கு தொடங்கப் பட்டது?

A) புது டெல்லி

B) மும்பை

C) பெங்களூரு

D) குருகிராம்

53. What is India's global rank in fish production?

A) First

B) Second

C) Third

D) Fourth

உலகளாவிய மீன் உற்பத்தியில் இந்தியாவின் தரவரிசை யாது?

A) முதலாவது இடம்

B) இரண்டாவது இடம்

C) மூன்றாவது இடம்

D) நான்காவது இடம்

54. The Blue Flag certification is awarded by which organization?

A) United Nations Environment Programme

B) Foundation for Environmental Education

C) World Wildlife Fund

D) UNESCO

நீலக் கொடி சான்றிதழ் எந்த அமைப்பினால் வழங்கப் படுகிறது?

A) ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு

B) சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளை

C) உலக வனவிலங்கு நிதியம்

D) யுனெஸ்கோ

55. LEAPS 2025 stands for

A) Logistics Enhancement and Allied Projects Shield

B) Logistics Excellence, Advancement, and Performance Shield

C) Leadership in Export and Allied Product Systems

D) Logistics Efficiency and Progress Standards

LEAPS 2025 என்பது எதனைக் குறிக்கிறது?

A) தளவாட மேம்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய திட்டங்களின் காப்பு

B) தளவாடங்களின் சிறந்து விளங்குதல் தன்மை, மேம்பாடு மற்றும் செயல்திறன் காப்பு

C) ஏற்றுமதி மற்றும் அதனுடன் தொடர்புடைய தயாரிப்பு அமைப்புகளில் தலைமைத்துவம்

D) தளவாடங்கள் செயல்திறன் மற்றும் முன்னேற்ற தரநிலைகள்

56. India's first National Household Income Survey (NHIS) will be launched by

A) Ministry of Finance

B) NITI Aayog

C) Ministry of Statistics and Programme Implementation

D) Ministry of Commerce and Industry

இந்தியாவின் முதல் தேசிய குடும்ப வருமானக் கணக்கெடுப்பு (NHIS) எந்த அமைப்பினால் தொடங்கப்பட உள்ளது?

A) நிதி அமைச்சகம்

B) நிதி ஆயோக்

C) புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்

D) வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

57. India's first Semiconductor Innovation Museum was inaugurated at?

A) Bengaluru

B) Chennai

C) Pune

D) Hyderabad

இந்தியாவின் முதல் குறைக் கடத்தி புத்தாக்க அருங்காட்சியகம் எங்கு திறக்கப் பட்டு உள்ளது?

A) பெங்களூர்

B) சென்னை

C) புனே

D) ஐதராபாத்

58. Choose the incorrect statement regarding India's 2023 Vital Statistics report.

A) Bihar recorded the lowest Sex Ratio at Birth (SRB)

B) Arunachal Pradesh reported the highest Sex Ratio at Birth.

C) In 2023, the number of births registered in India decreased compared to 2022.

D) All statements are correct.

இந்தியாவின் 2023 ஆம் ஆண்டு முக்கியப் புள்ளி விவரங்கள் அறிக்கை தொடர்பான தவறான கூற்றினைத் தேர்ந்தெடுக்கவும்.

A) பீகார் மாநிலத்தில் மிகவும் குறைவான அளவில் பிறப்பின் போதான பாலின விகிதம் பதிவானது.

B) அருணாச்சலப் பிரதேசத்தில் மிக அதிக அளவில் பிறப்பின் போதான பாலின விகிதம் பதிவானது.

C) 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை என்பது 2022 ஆம் ஆண்டில் பதிவானதுடன் ஒப்பிடும் போது குறைந்து உள்ளது.

D) அனைத்து கூற்றுக்களும் சரியானவை.

59. What is the phenomenon of "Fomoflation" primarily driven by?

A) Macroeconomic factors and government deficit spending

B) Decrease in global supply chains

C) Consumer psychology and fear of missing out

D) Fixed costs and production taxes

"ஃபோமோஃப்ளேஷன்" நிகழ்வு முதன்மையாக எதனால் இயக்கப்படுகிறது?

A) பருப்பொருளாதார காரணிகள் மற்றும் அரசாங்கத்தின் பற்றாக்குறையான செலவினம்

B) உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் சரிவு

C) நுகர்வோர் உளவியல் மற்றும் தவறவிடப்படுதல் குறித்த பயம்

D) நிலையான செலவுகள் மற்றும் உற்பத்தி வரிகள்

60. Which country was validated by the WHO for achieving the world’s first verified triple elimination of mother-to-child transmission (EMTCT)?

A) India

B) Singapore

C) Sri Lanka

D) Maldives

தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவும் மூன்று நோய்கள் ஒழிப்பினை (EMTCT) எட்டியதாக உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட உலகின் முதல் நாடு எது?

A) இந்தியா

B) சிங்கப்பூர்

C) இலங்கை

D) மாலத்தீவுகள்

61. The name of India’s largest privately built satellite is

A) Aryabhata

B) Kalpana-1

C) Drishti

D) Bhaskara-I

இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை செயற்கைக் கோளின் பெயர் யாது?

A) ஆர்யபட்டா

B) கல்பனா-1

C) திருஷ்டி

D) பாஸ்கரா-I

62. What is the primary purpose of the 'Vishwas Scheme'?

A) To facilitate tax payments for start-ups

B) To provide interest-free loans to small businesses

C) To reduce litigation related to EPF dues

D) To subsidize training for foreign language initiatives

'விஸ்வாஸ் திட்டத்தின்' முதன்மை நோக்கம் யாது?

A) புத்தொழில் நிறுவனங்களுக்கு வரி செலுத்துவதை எளிதாக்குதல்

B) சிறு வணிகங்களுக்கு வட்டியில்லா கடன்களை வழங்குதல்

C) EPF நிலுவைத் தொகை தொடர்பான வழக்குகளைக் குறைத்தல்

D) வெளிநாட்டு மொழி முன்னெடுப்புகளுக்கான பயிற்சிக்கு மானியம் வழங்குதல்

63. Van Rakshak Project was launched by

A) MoEFCC

B) World Wildlife Fund

C) Wildlife Trust of India

D) Forest Survey of India

வன் ரக்சக் திட்டம் எந்த அமைப்பினால் தொடங்கப்பட்டது?

A) வனம், பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம்

B) உலக வனவிலங்கு நிதியம்

C) இந்திய வனவிலங்கு அறக்கட்டளை

D) இந்திய வன ஆய்வு அமைப்பு

64. The Kiru Hydroelectric Project is under construction on which river?

A) Jhelum

B) Chenab

C) Indus

D) Ravi

கிரு நீர்மின்நிலையம் எந்த நதியில் கட்டமைக்கப்பட்டு வருகிறது?

A) ஜீலம்

B) செனாப்

C) சிந்து

D) ராவி

65. The Siddi community, which is classified as a Particularly Vulnerable Tribal Group, belongs to?

A) Gujarat

B) Assam

C) Jammu & Kashmir

D) Arunachal Pradesh

எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினர் குழுவாக வகைப்படுத்தப்பட்ட சித்தி சமூகம் எந்த மாநிலம் / ஒன்றியப் பிரதேசத்தினைச் சேர்ந்ததாகும்?

A) குஜராத்

B) அசாம்

